17.06.2026

OS. No. **231/2019**

**வா.சா.1 –** திரு. பாலசேகர் த/பெ. தங்கம்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :-**

சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியும். அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள கிரைய ஒப்பந்த பத்திரம் 20 ரூபாய் முத்திரைத்தாளில் எழுதப்பட்டது பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த பத்திரமும் செல்லக்கூடியது என்பதால் அந்த ஆவணத்தை பதிவு செய்யப்படவில்லை. நான் எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். கடந்த 01.12.2012 க்கு பிறகு கிரைய ஒப்பந்த பத்திரம் பிறப்பித்தால் அது பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் எனக்கு சட்டம் தெரியாது. அந்த ஒப்பந்த பத்திரத்தில் காலக்கெடு நிர்ணயிக்கப்படவில்லை. காலக்கெடு குறிப்பிடாமல் ஒப்பந்த பத்திரம் பிறப்பிக்கப்பட்டு இருப்பதால் அது செல்லாது என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதியுடன் எனக்கு வியாபார தொடர்பு எதுவும் கிடையாது. கருப்பசாமி ஸ்டோர்ஸ் மூலம் பணம் அனுப்பியதாக சொல்வது மூவரின் கணக்கு என்றால் இல்லை. கருப்பசாமி ஸ்டோர்ஸ் கணக்கில் இருந்து பணம் அனுப்பிய காரணத்தினால் தான் இந்த வழக்கில் 2, 3 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்த்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த பத்திரம் என்பதால் வழக்கு சொத்தை நான் திரும்ப கேட்க முடியாது என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. அந்த சொத்தின் பேரில் நான் பற்றுரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. நான் முதல் பிரதிவாதியிடம் கொடுத்த அட்வான்ஸ் தொகை மட்டும் திரும்ப பெறுவதற்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் முதல் பிரதிவாதியிடம் ரூபாய் 10 லட்சம் மட்டும் அட்வான்ஸ் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் ரூ. 17 லட்சத்து இருபத்திரெண்டாயிரத்து 500 ரூபாய் செலுத்த வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு விருப்பமாகவும் தயாராகவும் இருந்தேன் என்பதை காண்பிப்பதற்கு ஏதாவது ஆவணங்கள் இருக்கிறதா என்றால் ஒவ்வொரு மாதமும் நான் மாதாந்திர தவணைத் தொகை செலுத்தி வந்துள்ளேன். அந்த மாதாந்திர தவணைத் தொகை செலுத்தியது தொடர்பாக ஒப்பந்த பத்திரத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. மீதி கிரைய தொகையை இந்த நீதிமன்றத்தில் நான் வைப்பீடு செய்யவில்லை. என் தம்பியிடம் இருந்து தொகை வசூல் செய்ய முடியாது என்ற காரணத்தினால் சொத்தை கிரையம் வாங்கிய நபரிடம் இருந்து பணம் பெறுவதற்காக முயற்சி செய்து வழக்கை தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரி அல்ல. நான் என் தம்பியிடம் இருந்துதான் பணத்தை பெற வேண்டும் என்றும் இரண்டு மூன்று பிரதிவாதிகள் எந்த விதத்திலும் பணம் செலுத்த கடமைப்பட்டவர்கள் கிடையாது என்றால் சரி அல்ல. வழக்கு சொத்தை தகுந்த மறுபயன் செலுத்தி இரண்டு மூன்று பிரதிவாதிகள் கிரயம் பெற்று இருக்கிறார்கள் என்றால் சரி அல்ல. இந்த வழக்கில் கண்ட இரண்டு மூன்று பிரதிவாதிகள் வழக்கு நடைபெறும் விபரம் தெரிந்து சொத்தை கிரையம் வாங்கி இருக்கிறார்கள். நான் நீதிமன்றத்தில் இடைக்கால மனு

எதுவும் தாக்கல் செய்து உத்தரவு எதுவும் பெறவில்லை. இந்த வழக்கில் கண்ட இரண்டு மூன்று பிரதிவாதிகள் நல்லெண்ண கிரைய தாரர்கள் என்றும் அவர்கள் வங்கி கடன் பெற்று சொத்தை கிரையம் வாங்கி இருப்பதால் நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதாக இல்லை என்றால் சரியல்ல. இரண்டு மூன்று பிரதிவாதிகள் கள்ள கூட்டு செய்து சொத்து வாங்கி இருப்பதாக கூறி இருப்பதற்கு ஆதாரம் ஆவணம் இருக்கிறதா என்றால் நான் ஏற்கனவே வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பி இருக்கிறேன். நான் அந்த அறிவிப்பை முதல் பிரதிபாதிக்கு அனுப்பி இருக்கிறேன். அந்த அறிவிப்பை இரண்டு மூன்று பிரதிவாதிகளுக்கு அனுப்பவில்லை. நான் கேட்டிருக்கக்கூடிய பரிகாரம் இரண்டு மூன்று பிரதிவாதிகளை பொறுத்து எனக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை என்றும் அவர்களைப் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

( ஓம்.), XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.